# மலாக்கா செட்டிகள் மலேசியத் தமிழர்கள் பண்டிகைகளும் வழிபாட்டு முறைகளும்

## Festivals and Religious Practices of Melaka Chetties among Malaysian Tamils

முனைவர் சில்லாழி கந்தசாமி / Dr.Silllalee S. Kandasamy[1]
பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் / Professor Dr.M.Rajantheran[2]

Date of submission: 2019-05-20
Date of acceptance: 2019-07-08
Date of Publication: 2019-12-31
Corresponding author's Name:
Dr.Silllalee S. Kandasamy
Email: silllalee@utar.edu.my

***Abstract***

Melaka Chetties are the immigrants from South India who had visited Melaka for trade during the 15th century. In the process of their business dealings in Melaka they eventually married women ofMelaka, raised families and naturalized themselves as Melaka nationals. The descendants of these early traders from India became to be known as Melaka Chetties. They occupied many important positions during the Monarch's rule in Melaka. On the other hand, many Indians from South India were also brought to Malaysia by the British later in the 18th and 19thcenturies. They were brought to work in various sectors such as Oil palm, Tea, Rubber, Sugarcane and Plantation estates. Apart from them there were others who were brought as Government servants, supervisors and were settled in Malaya. Furthermore, in order to involve in trading activities Tamilian settlers had settled in the towns and cities of Malaya. Those Indian immigrants from India were identified as Malaysian Indians after the independence in 1957. The early Indian immigrants since steppinginto Malaya have upheld the religious, beliefs, rituals and practices. In this manner of upholding they have sustained their religion and religious belief systems. Interestingly Melaka Chetties celebrate six major festivals such as BhogiParachu, Pongal, Karuparachu, Sivarathiri, Navarathiri, and Deepavali etc. On the other hand, Malaysian Indians celebrate Deepavali, Pongal and Thaipoosam. These celebrations of festivals help sustain and preserve their cultures while highlighting the uniqueness of the Malaysian Indian community.

**Key Words:** Chetty Melaka, Malaysian Indians, Culture, Festivals, Malaysia.

## முன்னுரை

தொண்மைத் தமிழ் மக்களின் நாகரீகமானது சங்க காலம் *(கி.மு.500கி.பி.200)* தொட்டே அடையாளம் காணப்பட்டு வருகிறது *(வரதராசன், 1992,* p.*27)*. இந்தியாவின் தென்நாட்டுப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட தொண்மைத் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகள் மொழியையும், சமய நம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வந்துள்ளன. இவ்விரண்டை ஒட்டியே பழந்தமிழரின்

[1]The author is a Assistant Professor in the Department of Modern Languages, University Tunku Abdul Rahman, Kajang, Malaysia. silllalee@utar.edu.my / silllalee@yahoo.com

[2] The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajanmun@ um.edu.my / rajantheran@gmail.com

தத்துவங்கள், சிந்தனைகள், கலை, இலக்கியம், உணவு, உடை, போன்ற இதர பண்பாட்டுக் கூறுகளும் வளர்ந்துள்ளன. கால மாற்றத்திற்கு ஏற்ப இப்பண்பாட்டுக் கூறுகள் ஒரு சில மாற்றங்களை உள்வாங்கிக் கொண்ட போதிலும் தமிழர்தம் பண்பாட்டுக் கூறுகள் அதன் அடிப்படைத் தத்துவத்தில் நிலை பெற்று நிற்பவையாகத்தான் விளங்குகின்றன.

பொதுவில் தமிழர்தம் பண்பாட்டுக் கூறுகளைக் கடைபிடிப்பதில் புலம் பெயர்ந்த தமிழரிடத்தில் மாறுபட்ட சில வழக்கங்களையும் இடைச்சேருகளையும் காணமுடிகிறது. இது ஒரு புதிய பண்பாட்டு அடையாளமாக முகிழ்ந்ததாக எண்ணுவதும் கூட ஏற்புடையதே. இதற்குப் புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாட்டில் உள்ள சமுதாயக் கட்டமைப்பு, அரசியல் அமைப்புமுறை, பிற இன மக்களின் பண்பாடு, வாழ்வியல் தாக்கம் எனப் பல்வேறு காரணங்கள் அடைப்படையான அமைகின்றன. ஆயினும் பெரும்பான்மமையான புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் தங்களின் பண்பாட்டுக் கூறுகளை அடிப்படைத் தத்துவக் கட்டமைப்பில் இருந்து பெரிதும் மாறுபடாத வகையில் தொடர்ந்து கடைபிடித்து வருவதை மறுக்க இயலாது (silllalee, 2011, p.340).

அந்த வகையில் தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட மலேசிய மலாக்கா செட்டிகள் மற்றும் மலேசியத் தமிழர்களின் வாழ்க்கையில் இன்றளவும் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகள் பெருமளவில் பாதுகாக்கப்பட்டே வருகின்றன. இதன் அடிப்படையில், தமிழ் மக்களின் பண்பாட்டுக் கூறுகள் பண்டிகைக் கொண்டாட்டங்களின் வழி மலேசியாவில் வாழும் இவ்விரு பிரிவினரிடையே எவ்வாறு நிலைபெறுகின்றது என்பதை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## மலாக்கா செட்டிகள்

மலாக்கா செட்டிகள் 15ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து மலாக்காவிற்கு வாணிபம் மேற்கொள்ள வந்த தமிழ் வர்த்தகச் சமூகத்தினராவர். இவர்கள் காஞ்சிபுரத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். இவர்களை மலாய் மொழியில் பெரனாக்கான் செட்டி மலாக்கா (Peranakan Chetti Melaka) என அழைப்பர். இதில் பெரனாக்கான் என்பது பிள்ளை அல்லது உள்நாட்டில் பிறந்தவர் எனப் பொருளாகும். வர்த்தக நிமித்தமாக மலாக்காவிற்கு வந்த இவர்கள் இங்குள்ள பெண்களை மணந்து பிள்ளைகளைப் பெற்று மலாக்கா நாட்டவர்களானார்கள். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளே (பெரனாக்கான்) மலாக்கா செட்டிகள் ஆகினர் (நிஷ்மீமீ ஜிலீவீணீஸீ பிஷீநீளீ, 1985). மலாக்கா செட்டிகள் உள்நாட்டுப் பெண்களை (மலாய் இனப் பெண்கள்) மணந்ததால் இப்பெண்களால் வளர்க்கப்பட்ட அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் தமிழ் கற்கும் சூழலின்றி மலாய் மொழியிலேயே பழக்கப்படுத்தப்பட்டனர். அதனால் இன்றளவும் இவர்களின் தாய் மொழி மலாய் மொழியாகவே உள்ளது (Ravichandran Moorthy, 2009, pp.7-9).

மலாக்கா செட்டிகள், மலாக்கா மன்னர்கள் காலத்தில் அவர்களின் ஆட்சியில் பல முக்கியப் பொறுப்புகளை வகித்தவர்களாவர். மலாக்கா மன்னர்கள் காலத்திலேயே இங்கு 40,000 முதல் 50,000 வரை எண்ணிக்கையிலான இந்திய மக்கள் வாழ்ந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன (Meilink-Roelofsz, 1962, p.51). இது போலவே மலாக்கா சுல்தான்களின் ஆட்சி காலத்திற்குப் பின் மலாக்காவைக் கைப்பற்றி ஆட்சி செய்த போர்த்துகீசியர்கள் காலத்திலும் (1511) மலாக்கா செட்டிகள் இவர்களின் ஆட்சியில் பெண்டஹாரா எனப்படும் முதலமைச்சர் போன்ற மிகப் பெரிய பதவிகளை வகித்துள்ளனர். ஆனால் அதைத் தொடர்ந்து மலாக்கா டச்சுக்காரர்களின் வசம் (1641) சென்ற பின்னர் மலாக்கா செட்டிகள் வாணிபத்தில் நலிவுற்றனர் (Vineeta Sinha, 2011, p.59).

டச்சுக்காரர்களின் ஆட்ச்சிக்குப் பிறகு பிரிட்டீசார் மலாக்காவைக் கைப்பற்றினர். பிரிட்டீசாரின் காலணித்துவத்தின் போது (1795) பிரிட்டீசார் மலாக்கா துறைமுகத்திற்கு மாற்றாக சிங்கப்பூர் துறைமுகத்தை மேம்படுத்தினர். இக்காலத்தில் மலாக்கா

செட்டிகள் சிலர் பிரிட்டிசாரின் ஆட்சியில் செயல்பட்ட அரசாங்க ஊழியர்களாகப் பணியில் இருந்தனர். இவ்வாறு அரசாங்கப் பணியில் இருந்தவர்கள் சிங்கப்பூருக்கு உத்தியோக நிமித்தமாகப் புலம் பெயர்ந்தனர். ஆயினும் கூட பெரும்பான்மையினர் மலாக்காவில் விவசாயம், சிறு வாணிபம், ஆரசாங்க வேலை போன்ற தொழில்களை மேற்கொண்டு மலாக்காவிலேயே நிலைபெற்றனர். இவ்வாறு மலாக்காவையே தங்களின் வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்த இம்மக்களே இன்று மலாக்கா செட்டி சமூகத்தின் ஆதாரமாகவும் அடையாளமாகவும் உள்ளனர். இன்று இவர்கள் மலாக்காவின் காஜா பேராங் (நிணீழ்ணீலீ நிமீக்ஷீணீஸீரீ) சாலையில் உள்ள கம்போங் செட்டி (செட்டிக் கிராமம்) எனும் குடியிருப்பில் தங்களின் தொண்மையான பண்பாட்டுக் கூறுகளைக் கட்டிக் கத்து வாழ்ந்து வருகின்றனர் (Karen Loh & Jegatheesan Velupillai, 2017, p.13).

## மலேசியத் தமிழர்கள்

இன்று மலேசிய இந்தியர்கள் என அடையாளம் காணப்படும் மலேசியத் தமிழர்கள் 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ஆம்நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ் நாட்டிலிருந்து மலாயாவிற்கு பிரிட்டீசாரால் இரப்பர், செம்பனை, தேயிலை, கரும்பு, போன்ற தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டவர்களாவர். இதில் பெரும்பான்மையோர் மதுரை, ஆர்க்காடு, கடலூர், செங்கல்பட்டு, நெல்லூர், தஞ் சாவூர், திருச்சி, நாகபட்டிணம், சென்னை போன்ற பகுதிகளிலிருந்து வந்தவர்களாவர் (Jackson, 1961, p.59-62).

பிரிட்டீசார் காலத்தில் மலாயாவிற்குக் கொண்டுவரப்பட்ட இவர்கள், தொடக்கத்தில் குத்தகை முறையிலும் (Arasaratnam, 1970, p. 49-60), பின்னர் கங்காணி முறையிலும் (Harper, 2001, p.28) வரவழைக்கப்பட்டு தோட்டப்புரங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இவர்களைத் தவிர்த்து அரசாங்க வேலையாட்களாகவும் பலர் மலாயாவில் குடியமர்த்தப்பட்டனர் (Arasaratnam, 1970, p.33-34). மேலும், மலாயாவில் வாணிபம் மேற்கொள்ளவும் தமிழ்நாட்டு வர்த்தகத்துறையில் இருந்த குடியினர் நகர்ப்புரங்களில் குடியேறினர் (Prakash Jain, 1990, p.100). இவ்வாறு பிரிட்டீசாரின் காலத்தில் மலாயாவில் குடியேறிய தமிழ் மக்கள் பின்னர் மலாயா 1957ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பின்னர் மலேசியாவின் குடியுரிமை பெற்று மலேசிய இந்தியர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். மலாயாவில் பிரிட்டீசாரின் காலத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களே இன்று மலேசிய இந்தியர்கள்/தமிழர்கள் என அடையாளம் காணப்படுகின்றனர். மலாயாவிற்கு குடிபெயர்ந்த காலம் தொட்டே இவர்கள் தங்களின் பண்பாட்டுப் பாரம்பரிய முறைகளையும் இங்கு நிலைநிறுத்தியுள்ளனர். அதே வேளையில் ஆலயங்களை அமைத்தும் அதனைத் தொட்டு பண்டிகைகளைக் கொண்டாடியும் இப்பாரம்பரியங்களைப் பாதுகாத்தும் வளர்த்தும் வந்துள்ளனர். இதுவே தற்போது மலேசியத் தமிழர்களின் அடையாளமாக விளங்குகின்றது.

## மலாக்கா செட்டிகளின் பண்டிகைகள்

மலாக்கா செட்டிகள் தமிழ் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்தவர்களாக இருந்ததால் இவர்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர் என்பது அறியப்படுகின்றது (Ravichandran Moorthy, 2009, p.6). டச்சுக்க்காரார்களின் ஆட்சி காலத்தில் கபிதன் தெய்வநாயகம் செட்டி என்பாரால் மலாக்காவில் ஸ்ரீ பொய்யாத விநாயகர் ஆலயம் எழுப்பப்பட்டது. இதுவே மலேசியாவில் இன்றளவும் வழிபாட்டில் உள்ள மிகப் பழைமையான ஆலயமாவும் விளங்குகின்றது. மலாக்கா செட்டிகளின் முக்கியப் பண்டிகைகள் என ஆறு விழாக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன போகிபரச்சு, பொங்கல், கனிப்பரச்சு, சிவராத்திரி, நவராத்திரி, தீபாவளிப் பண்டிகையாகும். இவையாவும் சைவ சமயத்தைச் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது (Karen Loh &b Jegatheesan Velupillai, 2017, p.10).

போகி பரச்சு பண்டிகையானது மார்கழி மாத இறுதி நாளான போகி அன்று கொண்டாடப்படுகின்றது. போகிக்குச் சில தினங்களுக்கு முன்னர் இறந்தவர்களின் சமாதிக்குச் சென்று சமாதியைச் சுத்தம் செய்து அவர்களுக்குச் சைவ உணவு படையலிட்டு மலாக்கா செட்டிகள் வழிபாடு மேற்கொள்கின்றனர். போகி அன்று விட்டில் குத்து விளக்கு ஏற்றி வைத்து அதன் முன் ஒரு வாழை இலையில் முன்னோர்களுக்கான ஆடை, ஆபரணங்கள் போன்றவற்றை வைக்கின்றனர். குத்துவிளக்குகின் இருமருங்கிலும் சிவப்பு மெலுகுவர்த்தி வைக்கப்படும் வழக்கமும் உள்ளது. குத்துவிளக்கின் முன் உள்ள வாழை இலையில் புகையிலை, சுருட்டு போன்றவையும் வப்பதுண்டு. அடுத்து இடப்பக்கம் 5 குவளை தேனீரும் வலப்பக்கம் 6 குவளை காப்பியும் வைக்கப்படுகிறது. பின்னர் 7 தலைவாழை இலைகள் வைக்கப்பட்டு அதில் 21 வகையான உணவுகள் படையலிடப்படுகின்றன. இதில் மலாய்க்காரர்களின் நாசி லெமாக் மற்றும் பல பலகாரங்களும் இடம் பெறுகின்றனர். இவ்வாறு மேற்கொள்ளப்படும் வழிபாடானது இவர்களின் முன்னொர் வழிபடாக ஆண்டு தோறும் அனுசரிக்கப்படுகின்றது (Karen Loh &b Jegatheesan Velupillai, 2017, p.10).

அடுத்து வருவது பொங்கல் பண்டிகை. இது தமிழ் நாட்டுப் பண்பாட்டு அமைப்பிலேயே கொண்டாடப்படுகின்றது. ஆனால் இங்குள்ள செட்டி மக்களில் பலர் இப்பண்டிகையை ஆலயத்தில், குறிப்பாக கைலாசநாதர் ஆலயத்தில்தான் கொண்டாடுகின்றனர். பொங்கலன்று காலை 10 மணியளவில் கைலாசநாதர் ஆலயத்தில் அடுப்புக்குப் பூசையிட்டு அதில் பொங்கல் சட்டியை வைத்துப் பால் ஊற்றுகின்றனர். பின்னர் பால் பொங்கும் போது 'பொங்கலோ பொங்கல்', எனக் குலவையிடுகின்றனர். தொடர்ந்து, பச்சரிசி, சக்கரை, நெய், பருப்பு போன்றவற்றை இட்டு பொங்கல் வைத்து அதனை சூரியபகவானுக்குப் படையலிடுகின்றனர். இரவு ஸ்ரீ நடராஜர் மூர்த்தத்தை ஆலய உட்பிரகாரமாக ஊர்வலம் எடுத்து வருகின்றனர். அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகின்றது. தமிழ் நாட்டைப் போலவே இங்கும் மாடுகள் நன்கு அலங்கரிக்கப்பட்டு பூசை செய்யப்பட்டு அதற்குப் பொங்கல் ஊட்டப்படுகின்றது. மூன்றாம் நாள் கண்ணிப் பொங்கலும் தமிழரின் பாரம்பரிய முறைப்படிக் கொண்டாடப்படுகின்றது.

தொடர்ந்து, கனிப்பரச்சு. இப்பண்டிகையானது ஜூன் 15 முதல் ஜூலை 15 வரை உள்ள கால கட்டத்தில் மலாக்கா செட்டிகள் தங்களின் வசதிக்கேற்ற நாளில் ஆண்டு தோரும் கொண்டாடுகின்றனர். அந்த மாதத்தின் பருவ காலத்தில் கிடைக்கப் பெறும் பழவகைகளை முன்னோர்களுக்குப் படையலிடுவதே கனிபரச்சு பண்டிகையாகும். இதில் உள்நாட்டுப் பலகாரங்களும் முன்னோர்களுக்குப் படையலிடப்படும் வழக்கமுண்டு. இப்பண்டிகையின் சடங்கு முறைகளும் போகிபரச்சு போலவே மேற்கொள்ளப்படுகின்றது. இப்பண்டிகையின் நாளில் குத்துவிளக்கு, மெழுகுவர்த்தி போன்றவற்றில் தீபமேற்றி வைத்து அதன் முன் வாழையிலை வைத்து அதில் வெற்றிலை, பாக்கு போன்றவை வைக்கப்படுகின்றது. அடுத்து இடது பக்கம் 5 குவளை தேநீரும் வலது பக்கம் 4 குவளைகளில் காப்பியும் ஒரு குவளையில் மிலோ (Milo) பானமும் வைக்கப்படும். இதில் சிலரது வழக்கங்களில் மதுபானமும் இடம் பெறும். பின்னர் பல வகையான உள்நாட்டுப் பழங்களும், பலகாரங்களும் முன்னோர்களுக்குப் படையலிடப்பட்டு வழிபாடு மேற்கொள்ளப்பட்டும். இவை அனைத்தும் முன்னோர்களுக்குப் படையளிடப்பட்டு அவர்களைத் திருப்திபடுத்தி முன்னோர்களின் ஆசியினைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன (Karen Loh &b Jegatheesan Velupillai, 2017, p.10).

அடுத்து மலாக்கா செட்டிகள் கொண்டாடும் முக்கியப் பண்டிகையான சிவராத்திரியானது மலாக்காவில் உள்ள கைலாசநாதர் ஆலயத்தில் கொண்டாடப்படுகின்றது. மாசி மாதத்தில் வரும் இப்பண்டிகையன்று இவர்கள் விடிய

விடிய கைலாசநாதர் ஆலயத்தில் கண் விழித்து வழிபாடு மேற்கொள்கின்றனர். இது தமிழரின் பாரம்பரிய முறைப்படியே கொண்டாடப்படுகின்றது. இது போலவே நவராத்திரிப் பண்டிகையும் செட்டி மலாக்க மக்களின் சமயப் பண்டிகையாகவே கொண்டாடப்படுகின்றது. நவராத்திரிப் பண்டிகையானது காஜா பேராங் முத்துமாரியம்மன் ஆலயத்தில் 9 நாள் வைபவமாகக் கொண்டாடப்படுகின்றது. இறுதியாகத் தீபாவளிப் பண்டிகையானது மலாக்கா செட்டிகளால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இப்பண்டிகையன்று மலாக்கா செட்டிகள் ஆலய வழிபாடு மேற்கொண்டு பின்னர் உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று உணவருந்திப் பட்டாசு வெடித்துக் கொண்டாடுகின்றனர். பொதுவில் சிவராத்திரி, நவராத்திரி, தீபாவளி ஆகிய பண்டிகைகள் அனுசரிக்கப்படுவதில் ஆகம விதியில் இவர்களிடத்தில் பெரிய மாற்றங்கள் ஏதும் இருப்பதாக அறியப்படுவதில்லை. ஒரு சில உள்நாட்டுப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள், உணவு வகைகள் ஆகியவை தவிர்த்து வழிபாட்டு முறைகள் யாவும் மலேசியத் தமிழர்கள் கொண்டாடுவது போலவே அமைந்திருப்பது ஆய்வில் அறியப்படுகின்றது (Ravichandran Moorthy, 2009, p.6).

மலாக்கா செட்டிகளின் பண்டிகைகளுள் போகிப்பரச்சு மற்று கனிப்பரச்சு ஆகிய இரண்டு பண்டிகைகள் மட்டுமே தமிழர் பண்டிகைகளுள் இருந்து சற்றே மாறுபட்டு காணப்படுகின்றது. அதிலும் முன்னோர் வழிபாடு, தீபமேற்றுதல், படையலிடுதல் போன்ற தமிழர்தம் பண்பாட்டுக் கூறுகள் நிறைந்தே காணப்பட்டுகின்றன. மற்ற பண்டிகைகளில் அதிக மாற்றங்கள் அறியப்படவில்லை.

## மலேசியத் தமிழர்களின் பண்டிகைகள்

மலேசியத் தமிழர்களின் பண்டிகைகளைக் காணும் போது இவர்கள் இந்து மதத்தில் உள்ள அனைத்து முக்கியப் பண்டிகைகளையும் ஆகம முறைப்படியே கொண்டாடுவது அறியப்படுகின்றது. பிரிட்டீசாரின் காலத்தில் மலாயாவிற்கு வந்த தமிழ் மக்கள் தாங்கள் வாழ்ந்த கிராமங்களில் இருந்து கொண்டு வந்த பிடிமண்ணைக் கொண்டு தங்களின் தொடக்க கால வழிபாட்டுத் தலங்களை நிறுவினர். இது பெரும்பாலும் மாரியம்மன், முத்துமாரியம்மன், கருமாரியம்மன் ஆலயங்களாகத் தோட்டப்புரங்களில் அமையப்பெற்றது (Rajantheran & Manimaran, 2006, p.43). நகர்ப்புரங்களில் அரசாங்க ஊழியர்களாலும், வர்த்த சமூகத்தினராலும் முருகன், சிவன், திருமால் போன்ற மூர்த்தங்களின் ஆலயங்கள் அமைவுற்றன. மலேசியத் தமிழர்கள் எல்லாப் பண்டிகைகளையும் சிறப்பாகக் கொண்டாடிய போதும் இங்கு பொங்கல், தைபூசம்,தீபாவளி ஆகிய மூன்று பண்டிகைகள் மட்டுமே இங்கு மிகச் சிறப்பாகாக் கொண்டாடப்படுவது அறியப்படுகின்றது. இதில் தீபாவளியும் தைபூசமும் முதன்மையானதாகவும் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட பண்டிகைகளாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது (இராசேந்திரன், 2012, p.82).

தமிழ் நாட்டைப் போன்றே மலேசியத் தமிழர்களும் போகி உட்பட நான்கு நாட்களுக்குப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். போகி அன்று காலை பழைய துணிகளை தீயிடும் பழக்கம் மலேசியாவிலும் உள்ளது. மேலும், தமிழர்கள் அதிகம் வாழும் இடங்களில் ஒரு சடங்காக மட்டும் போகி அனுசரிக்கப்படுகின்றது. பொங்கல் அன்று வீட்டில் கரும்பு, மாவிலை தோரணம் கட்டி, காலை வேளையில் தமிழர் முறைப்படி பொங்கல் வைத்து அதனைச் சூரியனுக்குப் படைத்து வழிபடும் தமிழ் நாட்டின் அதே மரபு இங்கும் உள்ளது. நகர்ப்புரங்களில் குறிப்பாக வேலைக்குச் செல்பவர்கள் மாலை வேளையில் வீட்டில் பொங்கல் வைத்து இறைவனுக்குப் படையலிட்டு வணங்குகின்றனர். மேலும் சூரியப்பொங்கல் அன்று எல்லா ஆலயங்களிலும் சூரியப் பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு செய்யும் வழக்கம் இப்போது நடைமுறையில் உள்ளது (Rajantheran & Manimaran, 1994, pp.22-30).

மறுநாள் மாட்டுப் பொங்கல் அன்று தோட்டப்புரங்களில் மாடுகளுக்குப் பொங்கல் வைத்து அதனை மாடுகளுக்கு ஊட்டி வழிபடும் வழக்கம் உள்ளது. இத்தினத்தன்று மாடுகள் குளிப்பட்டப்பட்டு அவற்றின் கொம்புகளுக்குச் சாயம் பூசப்பட்டு பின்னர் பொங்கல் ஊட்டி வழிபாடு செய்யப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டு அஸ்ட்ரோ ஊடக நிலையம் ஜல்லிக்கட்டுப் போட்டியை முதன் முறையாக இங்கு நடத்தியது. கண்ணிப் பொங்கல் அன்று திருமணமாகத பெண்கள் ஆலயத்தில் பொங்கல் வைத்து வழிபடும் வழக்கம் (பாணன், 1992, ஜீ.103) தமிழ்நாட்டைப் போலவே மலேசியாவிலும் கடைபிடிக்கப்படுகின்றது. பொதுவில் இது மாலை வேளையில் செய்யும் வழிபாடாகவே மலேசியாவில் உள்ளது

அடுத்து தைபூசம். மலேசியாவைப் பொருத்த வரையில் தைபூசமானது முருகக் கடவுளுக்கான வழிபாடாகவே விளங்குகின்றது. தைபூசத்தை முன்னிட்டு சிலாங்கூர், குவாலாலம்பூர், கெடா, பினாங்கு போன்ற மாநிலங்களில் அரசு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. சிலாங்கூர் பத்துமலை, ஈப்போ கல்லுமலை, சுங்கைபட்டாணி சுப்பிரமணியர் ஆலயம், பினாங்கு தண்ணீர்மலை ஆகியன தைபூசத்திற்குப் மலேசியாவில் பிரசித்தி பெற்ற ஆலயங்களாகும். இதில் பத்துமலையே பிரதானம்.

தைபூசத்தின் முதல் நாளன்று இரவு 12.00 மணியளவில் குவாலாலும்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயத்தில் இருந்து விநாயகர் தங்க இரதத்திலும், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர் வெள்ளி இரதத்திலும் பத்துமலைக்கு ஊர்வலம் கொண்டு வரப்படுவர். பிற்பகல் வேளையில் உற்சவ மூர்த்தங்கள் பத்துமலையை அடைந்ததும் சேவற்கொடியேற்றத்துடன் பத்துமலையில் தைபூசம் தொடங்கும். முதல்நாள் தொடங்கும் தைபூசக் கொண்டாட்டம் மறுநாள் இரவு வரை தொடரும். மூன்றாம் நாள் மீண்டும் இரத ஊர்வலம் குவாலாலும்பூர் மகாமாரியம்மன் ஆலயம் நோக்கிச் செல்லும். இதோடு தைபூசக் கொண்டாட்டம் நிறைவுறும். இத்தைபூசக் கொண்டாட்டத்தில் பல வண்ணக் காவடிகளும் கணக்கிலடங்கா பால்குடங்களும் முருகனுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படும். அதோடு ஈப்போ கல்லுமலை திருக்கோவிலில் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட காவடிகள் தைபூச இரவு வேளையை வண்ணமயமாக்கும். இது ஈப்போ தைபூசத்தின் தனிச்சிறப்பு என்றுகூடக் கூறலாம். பொதுவில் இவ்விழா மலேசியத் தமிழர்களின் மிக முக்கியமான பண்பாட்டுக் கருவூலமாக விளங்குகிறது என்பதுவே உண்மை. (Rajantheran & Manimaran, 1994, pp.6-9).

அடுத்து தீபாவளிப் பண்டிகை. தீபாவளிப் பண்டிகையன்று மலேசியாவில் பொது விடுமுறை அனுசரிக்கப்படுகிறது. தீபாவளிப் பண்டிகைக்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே வீடுகளைத் தூய்மை செய்து அலங்கரித்தல், புத்தாடை வாங்குதல், பலகாரங்கள் செய்தல், எனப் பல்வேறு முன்னேற்பாடுகள் நடைபெறும். தீபாவளி முதல் நாளன்று இரவு முன்னோர்களுக்குப் படையலிட்டு வழிபாடு நடக்கும். இப்படையலைச் சிலர் சைவமாகவும் சிலர் அசைவமாகவும் சமைப்பதுண்டு. இதில் முன்னோர்கள் விரும்பிய உணவுகள் மதுபானம் சுருட்டு போன்றவற்றை வைத்து வழிபடும் வழக்கமும் சிலரிடத்தில் இன்றும் உள்ளது. தீபாவளி அன்று காலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்துப் புத்தாடை உடுத்தி விளக்கேற்றி இல்லத்தில் வழிபாடு மேற்கொண்டு, பின்னர் பெரியோர்களின் ஆசி பெற்று ஆலயம் சென்று வழிபடுவர். பிறகு உறவினர் இல்லங்களுக்குச் சென்று விருந்துண்டு மகிழ்வர். இதில் பட்டாசு வெடித்தல் என்பது முக்கிய அம்சம். அதோடு அரசியல் பிரமுகர்களின் இல்லங்களில் திறந்த இல்ல உபசரிப்புகள் நடத்தப்படுவது மலேசிய இந்தியர்களின் தீபாவளிக் கொண்டாட்டத்தில் மற்றொரு சிறப்பு அம்சமாக விளங்குகிறது (Rajantheran & Manimaran, 1994, p.12). .

## முடிவுரை

மலேசியச் செட்டிமார்களின் சமயப் பண்டிகைகள் யாவும் பெரும்பாலும் தமிழர் மரபுப்படியே கொண்டாடப்படுகின்றன. இதில் போகிப்பரச்சு மற்றும் கனிப்பரச்சு ஆகிய இரண்டு பண்டிகைகள் மட்டுமே சற்று மாறுபட்ட வழிபாட்டு முறையாக அறியப்படுகின்றது. ஆனால் மலேசியத் தமிழர்களின் சமயப் பண்டிகைகள் யாவும் தமிழ் நாட்டுப் பண்பாட்டு, பாரம்பரிய ஆகம விதிகளை இன்னமும் கடைபிடித்தொழுகும் போக்கிலேயே கொண்டாடப்படுகின்றது. இவ்விரு இனங்களும் மலேசியக் குடிகளாக இருந்த போதிலும் இவர்கள் மலேசியாவிற்குப் புலம்பெயர்ந்த காலகட்டமான சில நூற்றாண்டு இடைவெளியைக் கொண்டுள்ளதால் இவர்கள்களின் வாழ்க்கை முறையில் இது ஒரு சில பண்பாட்டு மாற்றங்கள் தோன்றுவதற்கு வித்திட்டது எனலாம். மலாக்கா செட்டிகள் மற்றும் மலேசியத் தமிழர்கள்/இந்தியர்களின் பண்டிகைகளில் உள்நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளின் கலப்புகளாவன உணவு, உடை போன்றவற்றில் நிலவிய போதும் இக்கலப்பானது எந்த வகையிலும் இவர்களின் பண்டிகைகளின் அடிப்படைக் கூறுகளான சடங்குகள், அதன் தத்துவங்கள் போன்றவற்றில் எந்த மாறுதல்களையும் ஏற்படுத்தவில்லை என்பதுவும் இவ்வாய்வின் முடிவாக அறியப்படுகின்றது.

## References


Arasaratnam, S. (1970). *Indians in Malaysia and Singapore*. Kuala Lumpur: Oxford University Press.

Gwee, Thian Hock. (1985). *A Nyonya Mosaic: : my mother's childhood.* Singapore: Times Books International.

Harper, T. N. (2001). *The end of empire and the making of Malaya.* Cambridge Cambridge University Press.

Jackson, R. N. (1961). *Immigrant Labour and the Development of Malaya 1786- 1920.* Kuala Lumpur: Government Printer.

Jain, Prakash C. (1990). *Racial discrimination against overseas Indians : a class analysis*. New Delhi (India): Concept Publ. Co.

Karen Loh & Jegatheesan Velupillai. (2017). The Chitties of Melaka. Melaka: Department of Museums Malaysia.

Meilink-Roelofsz, M. A. P. (1962). *Asian trade and European influence in the Indonesian Archipelago between 1500 and about 1630.* (PhD Dissertation). The Hague: Nijhoff.

Panan. (1992). *Tamilar Pandigaikal.* Chennai: Gangai Puthaga Nilayam.

Rajantheran, M & Manimaran Subramaniam. (2006). Konsep Ketuhanan Masyarakat Beragama Hindu Luar Bandar di Malaysia. Dalam Singaravelu Sachithanantham (Ed.),*Pengajian India Bicara Pelbagai Perspektif* (pp. 41-74). Kuala Lumpur: Penerbitan Universirti Malaya.

Rajantheran, M & Manimaran, S. (1994). *Perayaan Orang India*. Kuala Lumpur: Penerbitan

Fajar Bakti Sdn, Bhd.

Rajantheran, M., Silllalee, K., & Viknarasa, R. (2012). *An Introduction to Hinduism*. Selangor: Malaysia Hindu Sangam.

Ravichandran Moorthy. (2009). The evolution of the Chitty. *Jebat: Malaysian Journal of History, Politics and Strategic Studies, 36*, 1-15. Retrieved January 15, 2013 from http://myais.fsktm.um.edu.my/10237/1/Jebat2009-Ravi.pdf

Varatharasan, M. (1992). *Tamil Ilakiya varalaru.* New Delhi: Sakitya Academic.

Vineeta Sinha. (2011). *Religion-State Encounters in Hindu Domains From the Straits Settlements to Singapore.* Dordrecht [Netherlands] ; New York : Springer.